# எழுத்தாணி

பல்சுவை இதழ்


ஜூலை இதழ் 09 2013

## களை கட்டும் காளைச் சவாரி



13 ஆவது திருத்தம் வரமா? சாபமா?





கச்சான் கடை "அண்ணை" கற்றுத் தந்த பாடம்

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

எழுத்தாணி

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"


ஆசிரியர் குழு:

அ. சரண்யா
இ. ஜெயந்தினி
ச. பார்கவி
ஆர். ரஜீவன்
கோ. எடின்பரோ
எஸ். உமாசுதன்
சி. திவாகரன்
வ. ரஜிந்தன்
க. சக்திவேல்
ப. பார்த்தீபன்

நிர்வாக ஆசிரியர்:

தே. தேவானந்

ஆலோசனை, வழிகாட்டல்:

ஆ. சபேஸ்வரன்



வெளியீடு:

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம். (MRTC)
84, ஜும்மா பள்ளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 0212229873
Email: directormrtc@gmail.com


# பொருளடக்கம்


| | |
|---|---|
| இந்தப் பழம் புளிக்காது | 02 |
| குருவிக்காடு | 04 |
| களைகட்டும் காளைச் சவாரி | 06 |
| கற்பகம் தரும் கற்பகதரு | 09 |
| கச்சான் கடை அண்ணை கற்றுத்தந்த பாடம் | 11 |
| பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் | 14 |
| 13ஆவது திருத்தம் வரமா? சாபமா? | 16 |
| முடங்கிக் கிடக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டி | 19 |
| விழிப்புணர்வை ஊட்டுவதாக குறும்படங்கள் அமையவேண்டும் | 20 |
| வலி சுமந்த பாடசாலை | 22 |
| கோட்டைச் சுவர்களின் பின் மறைக்கப்படும் வலிகள் | 25 |
| கவிதைகள் | 28 |
| உலகெங்கும் ஒலிக்கும் ஈழத்து நாதம் | 29 |

# "இந்தப் பழம் புளிக்காது"



முந்திரிகைப் பழம் என்றால் அது தென்னிலங்கையில் இருந்தோ வெளிநாடுகளில் இருந்தோ தான் வரவேண்டும் என்பது அந்தக் காலம். யாழ்ப்பாணத் தில் இருந்தே முந்திரிகை ஏற் றுமதி செய்யப்படுவது இந் தக் காலம்.

ஆம்! யாழ்ப்பாணத்தில் முந்திரிகைச் செய்கை தற்போது பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருமளவு விவ சாயிகள் தற்போது முந்திரிகைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**புகையிலை, வெங்காயத்துக்கு அடுத்து பணப்பயிர் என்று சொல்லக் கூடியளவு முந்திரிகை விவசாயம் முக்கியத்துவம் பெற்றுவருகிறது.**

யாழ்ப்பாணத்தில் வளம் செழிக்கும் வலிகாமத்து மண்ணிலேயே அதிகம் முந்திரிகைச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் புகையிலை, வெங்காயத்துக்கு அடுத்து பணப்பயிர் என்று சொல்லக்கூடியளவு முந்திரிகை விவசாயம் முக்கியத்துவம் பெற்றுவருகிறது.

பணத்தை முதலிட்டு கொஞ்சக்காலம் பராமரிக்க வேண்டும். இரண்டு வருடங்களுக்கு பராமரிப்பு செலவு கொஞ்சம் கஷ்டம் தான். ஆனால் இரண்டு வருடங்களின் பின்னர் முதலிட்டதை பல மடங்காக திரும்பப் பெறலாம் என்கின்றனர் முந்திரிகை விவசாயிகள்.

1990 -2000 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் முந்திரிகை பயிர்ச்செய்கை அதிகமாகவே

காணப்பட்டது. பின்னர் ஏற்பட்ட சூழல்களால் இப்பயிர்ச் செய்கையை முற்றிலுமாகக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது என்கிறார் உரும்பிராயப் பகுதியில் முந்திரிகைச் செய்கையில் ஈடுபட்டுள்ள ராசன்.



மீண்டும் 2009 ஆண்டு முதல் படிப்படியாக முந்திரிகைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது. தற் போது அதிகளவானோர் இப்பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்கிறார் அவர். முந்திரிகை, பயிர்களை நன்றாக பராமரிக்க எந்தளவுக்கு பணத்தை செலவிடுகின்றோமோ அந்தள விற்கு விளைச்சலைப் பெறமுடியும்.

சில சந்தர்ப்பத்தில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப மிகவும் அவதானமாக பயிர்களை சிறந்த முறையில் பராமரிக்க வேண்டும்.

1000 கன்றுகளுக்கு குறைந்தது ஒன்றரை இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யவேண்டும். மருந்துச் செலவு, பசளை, கொடி படர்வதற்காக பந்தல், பழத்தை பாதுகாப்பதற்காக நெற் என செலவு கள் அதிகமாகவே இருக்கும்.

இரண்டாம் வருடம் செலவு கள் குறைந்து வருமானம் அதிகரிக்கும். அதுவரைக் கும் செலவிட்டு பராமரிக்க வேண்டும் என்று நிலைமைய மேலும் விளக்கினார் ராசன் என்ற அந்த முந்திரிகை விவ சாயி.

இன்றைய காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முந்திரிகைச் செய்கை பாதிப்படைந்து வருகின்றுது. சீரற்ற காலநிலை விவசாயப் பொருட்களின் விலையேற்றம் போன்ற காரணங்களால் இச்செய்கையில் பலர் ஆர்வம் காட்டுவதில்லை. பலர் முந்திரிகைச் செய்கை யைக் கைவிட்டு விட்டனர் என்கிறார் மற்றொரு விவசாயி.

பலர் வங்கிகளில் கடன் பெற்று முந்திரிகைக்கு செலவு செய்தனர். காலநிலை மாற்றத்தினால் விளைச்சலை பெறமுடியாமல் வங்கிக் கடனை கட்டவும் முடியாத நிலையில் இன்று விவ சாயிகள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர். ஆனால் அடுத்த மாதகாலப்பகுதியில் முந்திரிகைச்செய்கை வழமை நிலையை அடையும் என எதிர்பார்க்கின்றோம் என்றார் இன்னொருவர்.

யாழ்ப்பாணத்தில் முந்திரிகைச் செய்கையை நம்பி பல குடும்பங்கள் இருக்கின்றன. முந்திரிகைத் தோட்டங்களில் வேலை செய்வோரின் சம்பளமும் சற்று அதிகம் தான். உரும்பிராய் கிராமத்தில் முந்திரிகை வேலைகளை செய்வதற்கும் மற்றைய தோட்ட வேலைகளை செய்வதற்கும் நான்கு கம்பனிகள் உள்ளன.

11 மணி நேரங்கள் வேலைக்கு சுமார் 1500 ரூபா வரை சம்பளம் வழங்கப்படுகிறது. ஓரளவு நல்ல சம்பளம் என்பதால் இளைஞர் யுவதிகள் முதல் முதியவர்கள் வரை முந்திரிகைத் தோட் டங்களில் ஆர்வத்தோடு வேலை செய்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

**வ. பார்த்தீபன்-**

# குருவிக்காடு




க. சக்திவேல்

பச்சைப் பசேல் என காடு போல அடர்ந்த மரங்கள், ஆங்காங்கு நீர்தேங்கிய குழிகள், இதமான தென்றல்க் காற்று, இதனிடையே மனதை வருடும் பறவைகளின் ஓசை.

இந்த வர்ணனையைப் பார்த்தவுடன் ஏதோ வெளிநாடு குறித்து சொல்லப் போகி றோம் நினைத்தால், யாழ்ப்பாணத்தில் இந்த இத்தகைய இயற்கையை நீங்கள் இதுவரை அனுபவிக்க வில்லை என்று அர்த்தம். ஆம் யாழ்ப்பாணத்தில் இப்படியொரு இடம் இருக்கிறது என்றால் பலருக்கு நம்புவது கொஞ்சம் கஷ்டம்தான். தென்மராட்சி பிரதேசத்தின் சரசாலைப் பகுதியில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரம் சென் றால் இந்த இயற்கையின் இரகசியத்தை நீங்களும் அறிந்து அனுபவிக்கலாம். இந்த இடத்துக்கு குருவிக்காடு என்றே வழங்கப்படுகிறது.

இயற்கையிலே கொள்ளை அழகு கொண்ட இந்தப் பகுதிக்கு வெளிநாடுகளில் இருந்தும் வெளியூர்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பறவைகள் வந்து தங்கிச் செல்கின்றன.


ஏ-9 வீதியில் இருந்து சற்றுத்






தொலைவில் எந்த இரைச்சலும் அற்று நகர மயமாக்கலில் இருந்து இன்னமும் தப்பிப் பிழைத்து இருக்கிறது குருவிக் காடு. மனிதர்களின் நடமாட்டம் கூட மிக மிகக் குறைவே. இதுவே அதன் இயற்கையைக் காத்துக் கொள்ள வழிசெய்கிறது. நீங்கள் எங்கும் இதுவரை பார்த்திராத பல அரிய வகைப் பறைவைகளை இங்கு பார்க்கலாம். பெரும் கூட்டம், அமர்க்களம் இல்லாமல் இயற்கையை மட்டுமே ரசிக்க விரும்புபவர்கள் மட்டுமே இங்கு செல்லலாம். கூத்தும் கும்மாளமுமே பொழுதுபோக்காக கொண்டவர்கள் இந்த இடத்தை தவிர்ப்பது அவர்களுக்கு மட்டுமல்ல இயற்கைக்கும் நம்மையாக இருக்கும். இந்த இடத்தை பறவைகளுக்கான சரணாலயமாக அங்கீகரிப்பது குறித்து கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் யாரும் இதுகுறித்து இதுவரை அவ்வளவு கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. இயற்கைக்கு அந்நியப்பட்டு நகரமயமாகிவரும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் இத்தகைய இடங்கள் பாதுகாக்கப்படவேண்டியது காலத்தின் தேவை. பல்தேசிய, தேசியக் கம்பனிகளின் கழுகுப் பார்வை யாழ்ப்பாணத்தில் உள்ள வெற்றிடங்களை நோக்கித் திரும்பியிருக்கும் இன்றைய நிலையில் இத்தகைய இடங்களில் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும். இதுவே எம்மை அரவணைக்கும் இயற்கையை அரவணைக்க நாம் செய்யும் மிகப்பெரிய கைமாறாக இருக்கும்.

**பல்தேசிய, தேசியக் கம்பனிகளின் கழுகுப் பார்வை யாழ்ப்பாணத்தில் உள்ள வெற்றிடங்களை நோக்கித் திரும்பியிருக்கும் இன்றைய நிலையில் இத்தகைய இடங்களில் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும்.**



# களை கட்டும் காளைச் சவாரி




எங்கிருந்தோ வந்த கிறிக் கெற்றும் இன்னபிற விளையாட்டுக்களும் எம்மை ஆக்கிரமித்துக்கொள்ள எமக்கே உரித்தான எமது சூழலுக்குப் பொருத்த மான எமது பாரிம்பரிய விளையாட்டுக்கள் மெல்ல மெல்ல மறைந்து செலகின்றன.

தமிழர்களுக்கே உரித்தான வீரமிகு விளையாட்டுக்களை இன்று யாழ்ப்பாணத்தில் பார்ப்பதே அரிது என்ற நிலை உருவாகிவருகிறது.

ஆனாலும் எமது வீர விளை யாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்னனும் யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களில் துடிப்போடு நடைபெறுவது ஓரளவு ஆறுதலான விடயம்.

யாழ்.மண்ணில் வட்டுக்கோட்டை, கொத்துத்துறை சவாரித்திடல், பொன்னாலை – மான்பாய்ஞ்சான்வெளி சவாரித்திடல், ஆவரங்கால் சவாரித்திடல், நீர்வேலி சவாரித்திடல், நவாலி கொத்துக்கட்டி சவாரித்திடல், மூளாய் சவாரித்திடல், மட்டுவில் சவாரித்திடல் போன்ற இடங்களில் இந்த வீர விளையாட்டுக்கள் நடைபெற்று வருகின்றன.

மாட்டுவண்டிச் சவாரிக்காக வாங்கப்படும் காளைகளின் நிறங்கள், சுழி, உடல் வளம், சிரசு வளம் போன்றவை மிக முக்கியமாக அவதானிக்கப்படுகின்றன. அனுபவம் மிக்க சவாரி விடுவைக்கார்களால் இவை நன்கு கவனிக்கப்படும்.

குறிப்பிட்ட சில நிறங்களை உடைய காளைகளுக்கு இன்னும் மவுசு அதிகம்.

மயிலை, கருவெள்ளை, சிறுமறையன், நாலுகால் சிலம்பன், அரச இலைச் சுட்டியன், வெள்ளையில் மறையன், மாவெள்ளை, கழுகனின் நெஞ்சடி மறையன் என போட்டியில் ஈடுபடும் காளைகளுக்கு அவற்றின் விசேட இயல்புகள், நிறங்கள், மற்றும் அடையாளங்களைக் கொண்டு பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன.

காளைகளில் நடுச்சுழி, விலங்குச்சுழி, புறாண்சுழி, பறவைச்சுழி, இராஜசுழி, வழுவுசுழி, ராஜமந்திரிச் சுழி, முற்சுழி, பிற்சுழி, நெத்திச்சுழி என பல வகையான சுழிகள் காணப்படுகின்றன.

இதிலே இராஜசுழி, நடுச்சுழி இறாஜமந்திர சுழி உடைய காளைகளே அதிக விலைபோகின்றன.

இவ்வாறே சாவாரிப்போட்டிக்காக காளைகள் தேர்ந்தெடுக்கப்படுகிறன. தேர்ந்தெடுக்கப்பட்ட காளைக் கன்றுகள் சாதாரண வளர்ப்பிலிருந்து விலக்கப்பட்டு விசேடமாக வளக்கப்படுகின்றன.

அவைகளுக்கான உணவுகளும் விசேடமாக வழங்கப்படுகிறன. நெல்லுமா, கடலை, உழுந்து, பயறு என்பனவே தேர்ந்தெடுக்கப்பட்ட காளைக்கன்றுகளின் உணவாகின்றன.



**இப்பருவம் வந்த காளை எதையும் கவ னிக்காது. எந்தக்கயிற்றிற்கும் மதிப் பழிக்காது. வீறுகொண்டிருக்கும்வேளை அக்காளைகளைக் கண்டாலே மனதுக் குள் அச்சம் உண்டாகும்.**

காளைக் கன்றுகளில் உடல் சீருக்கு ஏற்ப பச்சை அரிசித் தவிடோ புளுங்கள் அரிசித் தவிடோ கொடுக்கப்படுகின்றது. அத்தோடு நாளொன்று 4 முதல் 5 முட்டைகள் நல்லெண்ணெய், மருத்துவ முறைப்படி சாராயம் என்பன வழங்கப்படுகிறன.

இவ்வாறு கடும் சீரான வளர்ப்புக்கு உட்படுத்தப்பட்ட காளைகள் பயிற்சிக்கு உள்வாங்கப்படுகின்றன.

அதிலும் நான்கு அல்லது ஆறு பற்களை கெண்ட காளைகளை வன்னி அல்லது மன்னார் போன்ற ஊர்களில் உள்ள பட்டிகளில் இருந்து தேர்ந்தெடுத்து அக் காளைகளை சவாரிக்காக பழக்கி எடுப்பது என்பது சவாரி பிரியர்களுக்கு ஒரு சவாலான விடயம். (பற்களைக் கொண்டே காளைகளின் வயது கணிப்பிடப்படுகிறது).

இவ்வாறான காளைகளுக்கு பயிற்சியளிக்கும் போதுதான் அனுபவமும் வீரமும் பயிற்சியாளருக்கு ஒருசேரத் தேவைப்படுகின்றது.

இப்பருவத்தில் திமில் திரண்டு (காளையின் கழுத்தில் வளரும் தசை) போர்க்குணத்துடன் தாக்கும் வேகத்துடன் காளைகள் திமிறும். இப்பருவம் வந்த காளை எதையும் கவனிக்காது, எந்தக்கயிற்றிற்கும் மதிப்பழிக்காது.
வீறுகொண்டிருக்கும் வேளை அக்காளைகளைக் கண்டாலே மனதுக்குள் அச்சம் உண்டாகும்.

அவ்வறான காளைகளை பழக்கி எடுப்பது என்பது இலகுவான காரியமன்று. அவ்வாறான காளைகள் பட்டியில் இருந்து பிரிக்கப்பட்டு உடனேயே தனிமையான ஓர் இடத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் கட்டிவிடப்படுகின்றன.

இரண்டு மூன்று நாட்கள் செல்ல அதன் ஆவேசம் சிறிது சிறிதாக குறையத்தொடங்கிவிடும். அவ்வேளையில்தான் அக்காளைகளின் அருகில் செல்லத்தொடங்குவார்கள். தங்களிடம் உள்ள பழக்கப்பட்ட காளைகளின் உதவியுடன் அக்காளைகளுக்கு சவாரிக்கான பயிற்சிகளை வழங்குகின்றனர்.

இவ்வாறு சீரான வளர்ப்பிற்கு உட்படுத்தப்பட்ட காலைகளுக்கு தீவிரமான பயிற்சிகளை வழங்குகின்றனர். நீச்சல் பயிற்சி, நேரங்குறித்து விவசாய நிலங்களை உழுதல், 7.8 கிலோமீற்றர் கொண்ட தூரத்தை வண்டியில் பூட்டியவாறே ஓடிக்கடக்கும் பயிற்சி என்பன இவ்வாறான பயிற்சிகளில் சிலவாகும்.

அவ்வாறு பயிற்சி வழங்கப்பட்ட காளைகள் சவாரித்திடலில் வெள்க்கட்டு விடப்படும் (சவாரித்திடலில் சவாரி நடைபெறாத நேரத்தில் காளைகளை வண்டிலில் பூட்டி வேகமாக பாய விடுவது) அவ்வாறு அவைகளை ஓட விடும் போது அவைகளின் விசையை கணக்கிடுவார்கள்.

400 மீற்றர் கொண்ட சவாரித்திடலின் தூரத்தை A பிரிவுகள் காளைகள் 18 தொடக்கம் 24 நொடிப்பொழுதிலும் B பிரிவுக் காளைகள் 21 தொடக்கம் 29 நொடிப்பெழுதிலும் C பிரிவுக்காளைகள் 23 தொடக்கம் 30 நொடிப்பெழுதிலும் பிரிவுக்காளைகள் 30 தொடக்கம் 38 நொடிப்பொழுதிலும் கடக்க வேண்டும்.

அத்துடன் சவாரிவிடுகைக்காரர்களுக்கு அதாவது சவாரி வண்டிலை செலுத்துவோரின் தூண்டுதலுக்கு ஏற்ப காளைகள் செயற்பட வேண்டும். அவர்கள் வைக்கும் ஊசிக்கு ஏற்றவகையில் காளைகள் செயற்படவேண்டும். அவ்வாறு காளைகளின் திறமைகளை பரிசோதிப்பார்கள்.

பரிசோதிக்கப்பட்ட காளைகளில் சில சவாரிக்குணம் அற்றவையாக காணப்படும். சவாரி விடுகைக் காரர்களுக்கு திருப்தி அளிக்காத காளைகள் சவாரியில் இருந்து நீக்கப்பட்டு உழவுத்தொழிலுக்கு பயன்படுத்தப் படுகின்றன. அவர்களின் எண்ணங்களுக்கு திருப்தி அளித்த காளைகளே சவாரிக்கு பயன்படுத்தப்படுகின்றன.

காளைகளின் அளவிற்கு ஏற்ப துலாக்களின் அளவு செய்யப்படுகின்றது. சவாரிக்காக சீராக வளக்கப்பட்ட காளைகள் சவாரியில் ஈடுபடுத்தப்படுகின்றன. சவாரிக் களத்தில் சவாரி விடுவதற்கான சில விதிமுறைகள் இருக்கின்றன.

இரண்டு பற்களும் பற்கள் உடைக்காத கன்றுகளும் D பிரிவில் அனுமதிக்கப்படுகின்றன. இரண்டு பற்களுக்கு மேற்பட்ட காளைகளும் நலம் போடப்படாத காளைகளும் C பிரிவில் அனுமதிக்கப்படுகின்றன. நலம் போடப்பட்ட காளைகள் A,B பிரிவில் அனுமதிக்கப்படுகின்றன.

400 மீற்றர் கொண்ட சவாரித்திடலின் தூரத்தில் 50 யார் தூரத்திற்து எந்த வண்டிலும் ஒன்றோடொன்று மோதுப்படக் கூடாது அவ்வாறு மோதுண்டால் அக்காளைகள் சவாரியில் இருந்து நீக்கப்படும். ஓர் பிரிவில் ஓடிய காளைகள் இன்னொரு பிரிவில் பதிவு செய்யப்பட மாட்டாது.


50 யாருக்கு அப்பால் வண்டில்கள் மோதுண்டு சேதத்திற்கு உள்ளானால் ஒரு சில்லுடனாவது சில்லின் குடத்துடனாவது எல்லைக் கோட்டைக் கடக்க வேண்டும். நடுவரின் தீர்ப்பே இறுதியானதாக இருக்கும்.

விடந்தையின் இடையில் இருந்து எந்த சவாரி சொந்தக் காரரும் மாடுகளை விரட்டக் கூடாது. மூன்று தடவைகளுக்கு மேல் காளைகள் குழப்பப்பட்டு அவிழ்த்துப் பூட்டப்பட்டால் அக்காளைகளும் சவாரியிலிருந்து நீக்கப்பட வாய்ப்பு உண்டு.

சவாரிக்கு பதிவு செய்யப்பட்ட காளைகள் குலுக்கல் முறையில் தங்கள் சுவடுகளை தக்க வைத்துக் கொள்ளும். கொடியசைவோடு காளைகள் சவாரியில் விடப்படும். அவ்வாறு மூன்று தாக்குகளாக (தடவைகளாக) சவாரியில் காளைகள் செலுத்தப்படும்.

இவ்வாறு விடப்பட்ட காளைகள் அவைகளின் எண்ணிக்கைக்கேற்ப அடுத்த அடுத்த தேர்வுகளுக்கு தெரிவு செய்யப்படும். அவ்வாறு முதல் சுற்றில் விடப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட காளைகள் இரண்டாம் சுற்றுக்கு தேர்வு செய்யப்படும். இரண்டாம் சுற்றிலிருந்து நாலு சோடி காளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்றாம் சுற்றில் விடப்படும். அதாவது இறுதிச்சுற்றில் விடப்படும். இறுதிச்சுற்றில் ஓடிய காளைகள் அனைத்திற்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

சவாரியில் பெயர் போன A பிரிவுக் காளைகள் 12 தொடக்கம் 15 லட்சம் ரூபா வரை பணம் கொடுத்து வாங்கப்படுகிறன. சவாரிக்கு கிறாதி வண்டில் ஒன்றரை லட்சம் தொடக்கம் இரண்டு லட்சம் வரையான செலவில் செய்யப்படுகிறது.



பாரம்பரியமான வீர விளையாட்டில் பெரும் பொருள் நஷ்டம், உடல்ச்சேதம், தீராப் பகை, வன்முறை, நேரச் செலவு இவைகள் இருந்தும் இன்றும் சிலர் பழமை மாறாமல் இவ்வீர விளையாட்டில் தொடர்ந்தும் ஈடபட்டு வருகின்றனர்.

# கற்பகம் தரும் கற்பகதரு





**யாழ்ப்பாணத்தில் உள்ள பனை வளமே இந்தப் பிராந்தியத்தின் பொருளாதார விருத்திக்கு போதுமானது.**

யாழ்ப்பாணத்தில் கற்பகதரு பனை. அள்ள அள்ளக் குறையாத வளங்களை அள்ளித்தரும் பனையின் பயன்கள் ஏராளம்.


பனைகளுக்கு மத்தியில் வாழ்வதாலோ என்னவோ அதன் மகத்துவம் யாழ்ப்பாணத்தவர்களுக்கு புரியவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பனைவளமே இந்தப் பிராந்தியத்தின் பொருளாதார விருத்திக்கு போதுமானது.


ஆனால் இதனை சரியாக பயன்படுத்துகின்றோமா என்றால் இல்லவே இல்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள பனை வளத்தில் 100 இல் 10 விகித பங்கைக் கூட நாம் சரியாகப் பயன்படுத்துவதில்லை என்ற கருத்து உள்ளது.

ஆனால் தென்னிலங்கை மக்கள் பனையின் மகத்துவத்தை நன்கு உணர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்துக்கும் தெற்குக்கும் இடையிலான போக்குவரத்து இலகுவாக்கப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தின் பனை உற்பத்திப் பொருட்களுக்கு கேள்வி அதிகரித்துள்ளது. பனை சார்ந்த உணவுப் பொருட்களையும் இன்னபிறவற்றையும் தென்னிலங்கை மக்கள் அதிகமாக கொள்வனவு செய்து செல்கின்றனர் என்கிறார் யாழ்ப்பாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க

ஏற்றுமதி செய்யப்படுகிறன.
யாழ்ப்பாணத்தில்
ஒவ்வொரு இடத்திலும்
பனை, தென்னை அபிவிருத்தி
கூட்டுறவு சங்கம்
காணப்படுகிறது.
இச்சங்கங்கள்மூலம்
மேலும் உற்பத்தி பொருட்கள்
செய்யப்படுகிறன எனவும்
உதயகுமார் கூறுகிறார்.



தலைவர் கு. உதயமோகன்.



பனை அபிவிருத்தி
கூட்டுறவு சங்கத்தினால்
பனம் கள் பதப்
படுத்தப்படுகிறது.
பதப்படுத்தப்பட்ட
கள்ளினையே மக்கள்
விரும்புகின்றனர்.
பதப்படுத்தப்பட்ட கள்ளானது
1 வருடம்வரை
பழுதடையாமல் இருக்கும்.
இக் கள்ளானது மருந்தாகவும்
பாவிக்கப்படுகிறது.
அதன் நுகர்வும்
தற்போது அதிகம்
என்கிறார் அவர்.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில்
தற்போது சீவல் தொழில்
செய்பவர்களின் எண்ணிக்கை
குறைவடைந்து
காணப்படுகின்றது


எனவும் கு. உதயமோகன்
சுட்டிக்காட்டுகிறார்.

பனையில் இருந்து
பெறப்படுகின்ற உணவுப்
பொருட்களான ஒடியல்.
பனங்கிழங்கு, ஒடியல் மா,
பனாட்டு, விநாகிரி போன்றன
தற்போது அதிகளவில்
தென்னிலங்கைக்கும்
வெளிநாடுகளுக்கும்

யாழ்ப்பாணத்தில்
பனை சார்ந்த உற்பத்தியினை
மேம்படுத்துவதற்காக
அரசாங்கத்தினால்
கடன் உதவித்திட்டம் ஒன்றும்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் கீழ்
பனை சார் பொருட்கள்
உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களின்
வாழ்க்கைத் தரத்தை
உயர்த்தவும்

-பார்கவி-





# கச்சான் கடை "அண்ணை" கற்றுத் தந்த பாடம்

"ஒவ்வொருவரது வாழ்க்கையின் பின்பும் ஒவ்வொரு கதையிருக்கும். ஒரு வரலாறிருக்கும். வாழ்க்கைக்கான பாடம் இருக்கும். சுவாரஷ்யம் இருக்கும் அல்லது மனதைக் கலங்கடிக்கும் சோகம் கலந்திருக்கும்."

"நல்லதாயின் அந்தப் பாடத்தை நீயும் கற்றுக்கொள், ஒரு ஊடகவியலாளனாக உனது எழுத்தின் மூலம் மற்றவர்களுக்கும் கற்றுக்கொடு. தீயதாயின் அதிலிருந்தும் பாடம் கற்றுக்கொள். அந்தப் பாதையைத் தவிர்த்துவிடு"

ஊடகப் பாடத்தின் போது வகுப்பறையில் எப்போதோ ஆசிரியர் சொன்னது. நகுலேஸ்வரம் ஆலய வாசலில் அந்த மனிதரைப் பார்த்தபோது ஞாபகம் வந்தது. எழுத்தாணிக்காக எனக்கு ஒப்படைக்கப்பட்ட பக்கங்களும் வந்து அச்சுறுத்தின.

அந்த மனிதரைப் பார்த்ததும் நிச்சயம் இவருக்குள் ஒரு பெரிய கதை ஒளிந்திருக்கும் என்று எனக்குத் தோன்றியது. அதுவும் சோகக் கதையாகத் தான் இருக்கும் என அவரது தோற்றம் சொல்லியது.

நண்பர்களோடு நகுலேஸ்வரம் சென்ற நான் அவர்களோடு இணைந்து கச்சான் வாங்க அந்தக் கடைக்குப் போனேன். நண்பர்கள் கச்சானைக் கொறிக்க எனக்கோ அதற்கு முடியவில்லை. கச்சான் விற்றுக்கொண்டிருந்த அவரை சிறிது நேரம் உற்றுப் பார்த்தேன்.

ஒரு காலில்லை. ஒரு கண்ணும் இல்லை. ஆனால் உற்சாகம் மட்டும் மறைந்து போகாமல் சுறுசுறுப்பாய் வியாபாரத்தைக் கவனிக்கிறார் அவர். ஒத்தாசைக்கு பக்கத்தில் மனைவி.

தயங்கியவாறே சற்றுப் பேச்சுக் கொடுத்தேன். "அண்ண நீங்கள் எங்க இருக்கிறனிங்கள்? எவ்வளவு காலமா இங்க வியாபாரம் செய்யுறிங்கள்?"

என்னை ஏற இறங்கப் பார்த்தவர் முதலில் கதைக்கத் தயங்கினார். சற்றுநேரம் அங்கேயே நின்ற நான் இன்னும் ஒரு 50 ரூபாவுக்கு கடலை வாங்கினேன்.

அதனால் வந்த கரிசனையோ என்னவோ சாதாரணமாகப் பேசத் தொடங்கினார். "என்ர பெயர் குமரேசு வெற்றிவேலு. சொந்த இடம் கீரிமலை - வழியடைப்பு. முதல்ல மரக்காலையில வேலை செய்தன். காட்டுக்கு போய் விறகு வெட்டி கிராமங்களிற்குள் சென்று விற்பனை செய்வன். பின்னர் சிறிய மரக்காலையும் வைத்திருந்தன்".

"1989 இந்தியன் ஆமி வந்த நேரம் சொந்த இடங்களை விட்டு குடும்பத்தோடு இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பில் இருந்தோம். வேறு தொழில் இல்லை. கச்சான் வியாபாரத்தினை செய்யத் தொடங்கினேன் அதில்வரும் லாபத்தை வச்சு குடும்பத்தினை காப்பாற்றி வருகிறன்" என்றார்.

நான் எதிர்பார்க்கும் விடயத்தை கடைசிவரை சொல்லமாட்டார் போல என எண்ணிய நான், சற்றுத் தயங்கியவாறே "அண்ண உங்கட ஒரு கால் இல்லை. ஒரு கண்ணும் இல்லை. என்ன நடந்தது?" என்று பேச்சை மாற்றினேன்.

சற்று நேரம் தாடையைத் தடவியவாறு கடந்த காலத்தை மீட்ட அவர் பேசத் தொடங்கினார்.

"நல்லாப் போய் கொண்டிருந்தது என்ர வாழ்க்கை. 1996 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பு வேளான் பாடசாலைக் காணியை துப்பரவு செய்ய 16,000 ரூபாய் பேசப்பட்டு வேலைக்கு போனேன். காணி துப்பரவு செய்து அரைத்திட்டம் முடிந்துகொண்டிருக்கையில் எதிர்பாராமல் மிதி வெடியில் எனது கால் சிக்கியது".

"அந்த வெடிவிபத்தில் ஒரு காலையும் ஒரு கண்ணையும் பறிகொடுக்க வேண்டியதாப்போச்சுது. வாழ்க்கை முடிஞ்சு போனதா நினைச்சன். நான் உயிர் பிழைப்பன் என்டு கூட நினைக்கல. தொடர்ந்து 80 நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்தன்" என்றார்.

"நான் ஆஸ்பத்திரில இருக்கும் போதே கச்சான் வியாபாரத்தைச் செய்துதான் மனிசி என்னையும் பாத்து குடும்பத்தையும் பாத்தது. நானும் தொடர்ந்து அந்த வியாபாரத்தையே செய்யுறன்" எனக் கூறினார்.

திடீரென்று உற்சாகம் வந்தவராய் "எனது துரதிஷ்டத்திலயும் ஒரு அதிஷ்டம் தம்பி" என்றார்.

**ஒரு காலில்லை. ஒரு கண்ணும் இல்லை. ஆனால் உற்சாகம் மட்டும் மறைந்து போகாமல் சுறுசுறுப்பாய் வியாபாரத்தைக் கவ னிக்கிறார் அவர். ஒத்தாசைக்கு பக்கத்தில் மனைவி.**

"ஒரு நாள் கட்டட
வளர்ச்சி நிதிக்கு என்டு
பக்கத்தில இருக்கிற
ஒரு வாசிகசாலையில
இருந்து வந்து
அதிஷ்ரலாபச் சீட்டு
வாங்கச்சொல்லி
ஒரு பொடியன் கேட்டான்.
சரியென்டு 100 ரூபாய்க்கு
ஒன்ட வாங்கினன்"

"ஒரு கிழமை கழிச்சு
நான் பெற்றுக்கொண்ட
சீட்டுக்கு சவாரி
மோட்டார் சைக்கிள்
விழுந்திருக்கிறது என்டது
தெரிஞ்சுது.
என்ர சந்தோசத்துக்கு
அளவில்லை.
69,000 பொறுமதியான
மோட்டார் சைக்கிளை
கொடுத்தாங்க.
என்ர கச்சான்
வியாபாரத்துக்கு
இப்ப அது தான்
கடவுள் போல
கைகொடுக்குது.
அதில போய் ஊரில
விசேசம் நடக்கிற
இடங்களிலயும்
வியாபாரம் செய்யுறன்"
என்றார்.

"இப்பதான் எங்கட
சொந்த இடமான
கீரிமலைக்கு
விட்டிருக்கிறாங்கள்.
தற்போது இந்திய
வீட்டுத் திட்டமும்
தந்திருக்கு.
சுயதொழிலுக்கென்டு
ஆடு, மாடு
ஒரு நிறுவனத்தால
தந்திருக்கினம்"
என்றார் மேலும்
உற்சாகமாக.

ஒரு காலையும்
கண்ணையும் இழந்தாலும்
சோர்ந்துபோய்



"அந்த வெடிவிபத்தில் ஒரு காலையும் ஒரு கண்ணையும் பறிகொடுக்க வேண்டியதாப் போச்சுது.


முடங்கிவிடாமல்
உற்சாகமாய்ப் பேசும்
அந்த மனிதருடன்
பேசியது எனக்குள்ளும்
உற்சாகத்தைத் தந்தது.
அந்த மனிதருக்கு நன்றி
சொல்லி விடைபெற்றேன்.

"ஒவ்வொரு
மனிதருக்குள்ளும் ஏதோ
ஒரு கதை இருக்கிறது"
வகுப்பறை ஊடகப்
பாடத்தில் ஆசிரியர்
சொன்னது மீண்டும்
நினைவுக்கு வந்தது.

ப. பார்த்திபன்

# “பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்”

**பாண்டியன்குள மக்களுக்கு கச்சிதமாய்ப் பொருந்தும் பழமொழி**



-விஜயந்தினி-

பட்ட காலிலே படும்,
கெட்ட குடியே கெடும்
என்பது முதுமொழி.
இந்த முதுமொழி
யாருக்குப் பொருந்துகிறதோ
இல்லையோ
முல்லைத்தீவு மாவட்டம் -
பாண்டியன்குளம்
மக்களுக்கு
அப்படியே பொருந்தும்.

ஆம்!
யுத்தத்தால்
இடம்பெயர்ந்து, வீடிழந்து,
வாழ்வாதாரத்தையே
முற்றாக இழந்து தவிக்கும்
இந்த மக்களுக்கு
புதிய வீடுகளை
கட்டிக்கொடுக்க
இந்திய அரசு முன்வந்தது.
இதற்கமைய
கட்டப்பட்ட வீடுகள்
அதிகாரிகளின்
பாராமுகம்
ஒப்பந்தகாரரின்
பொறுப்பற்ற
தன்மையால்
மக்களுக்கு நீண்ட கால
உறைவிடமாக
அமையவில்லை.

யுத்தம் முடிவடைந்து
மீள் குடியேறிய மக்களுக்கு
ஆதரவு வழங்கும் முகமாக
இந்திய வீட்டுத்திட்டத்தின்
கீழ் முல்லைத்தீவு
பாண்டியன்குளம் கிராமத்தில்
கடந்த ஆறு மாதங்களுக்கு
முன்னர் அதாவது
2013 ஆண்டு தை மாதம் 50
வீடுகள் கட்டப்பட்டு
கையளிக்கப்பட்டன.
50 வீடுகளில்
பெரும்பாலானவை
சுவர் இடிந்தும்
நிலம் வெடித்தும்
மக்கள் தொடர்ந்தும்
வாழ முடியாத அபாய
கட்டத்தில் உள்ளன.

மாந்தை கிழக்கு
பிரதேச செயலர்
பிரிவிற்குட்பட்ட
பாண்டியன்குளம் கிராமத்தில்
நிலமற்ற மக்களுக்காக
அப்பகுதில்

**அமைக்கப்பட்டுள்ள அத்தனை வீடுகளும் சேதத்துடனேயே காணப்படுகின்றன.**

ஒதுக்குப்புறமாகவுள்ள
காட்டுப்பகுதியில்
கால் ஏக்கர் வீதம் நிலம்
வழங்கி
இந்திய வீட்டுத்திட்டத்தின்
கீழ் இந்த 50 வீடுகளும்
அமைக்கப்பட்டன.
மக்களிடம்
அவை கையளிக்கப்பட்டன.

ஆனால் அமைக்கப்பட்டுள்ள
அத்தனை வீடுகளும்
சேதத்துடனேயே
காணப்படுகின்றன.
இவ்வீடுகளில் மக்கள்
தொடர்ந்தும் குடியிருக்க
முடியாத நிலை
ஏற்பட்டுள்ளது. இதில்
ஒரு வீட்டின் பின்புறம்
முற்றாக இடிந்து
வீழ்ந்துள்ளது. மேலும்
பல வீடுகள் சிறிய மழைக்கே
ஒழுக ஆரம்பித்திருக்கின்றன.
இதேபோல் கட்டப்பட்ட
வீடுகளில் ஒன்றிரண்டை தவிர
ஏனைய அனைத்து வீடுகளும்
சேதமடைந்துள்ளன.

இடிந்த வீடுகளுக்குள்
வேறு வழியில்லாமல்
அபாயகரமான வாழ்வை
வாழ்ந்து கொண்டிருப்பதாக
வீட்டுத்திட்ட பயணாளிகளில்
ஒருவரான சி.தவராசா என்பவர்
கவலை தெரிவித்தார்.
எனினும் 15 வீடுகள்
சேதமடைந்திருந்த
நிலையில் அவை
சீர்செய்யப்பட்டுள்ளதாக
இப்பகுதி கிராமசேவகர்

சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அடர்ந்த காட்டுப்பகுதியில் இந்த குடியேற்றத்திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கான குடிநீர் மற்றும் இதர தேவைக்கான நீர் பெறுவதற்கான வசதிகள் இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. மேலும் குடியேற்றத்திட்டத்திற்குள் வீதிகள் எவையும் போடப்படாத நிலையில் சிறிய மழைக்கே வீதிகள் சகதியாக மாறிவிடுகின்றன.

இந்நிலையில் வீதிகள் அமைக்கப்படாமைக்கான காரணம் குறித்து மாந்தை கிழக்கு பிரதேச சபையினரிடம் கேட்ட போது, வீதிகளை அமைப்பதற்கான மூல வளங்கள் குறிப்பாக கிரவல், கருங்கல் போன்றன தமது பிரதேசத்திலேயே உள்ளபோதும் அவற்றை பெறுவதற்கு இராணுவம் பெரிய தடையாகவுள்ளதாக சுட்டிக்காட்டினர்.

இந்த மூல வளங்களை எடுப்பதற்கு படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுத்துள்ள நிலையில் தமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து அபிவிருத்திப் பணிகளும் பின் தள்ளிப்போய்க் கொண்டிருப்பதாக பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். இதேநேரம் சில தென்னிலங்கை ஒப்பந்தக்காரர் இந்த வளங்களை சுரண்டி வருவதாகவும் குற்றஞ்சாட்டினர்.

வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு விட்டதாகவும் மக்கள் நின்மதியாக வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் பிரசாரப்படுத்தப்படும் நிலையில் காட்டுப்பகுதியினுள் குடிநீர் முறையான வதிவிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இப்பகுதி மக்கள் அசௌகரியங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.





# 13 ஆவது திருத்தம் வரமா? சாபமா?

–முக்கிய பேசுபொருளாகியுள்ள 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து ஒரு பார்வை–

– உமாசுதன் –

வடமாகண சபை தேர்தல் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது இந்நிலையில் 13 ஆவது திருத்தம் பற்றி பேசவேண்டிய, அதனைப் பற்றி விவாதிக்கவேண்டிய நிலைக்கு நாம் ஆட்பட்டுள்ளோம்.

ஆழ்ந்த புரிதல் இல்லாமல் தோல்வி மனப்பான்மை யுடன் தங்களை மீள் கட்டமைத்துக்கொள்ளாது தற்போது தமிழர் அரசியல் தலைமைத்துவம் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் என்கின்ற மாயைக்குள் சிக்குண்டுள்ளதை காணமுடிகின்றது.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் 13 ஆவது திருத்தம் தொடர்பாகவும், அதன் அடிப்படையிலான மாகாணசபை முறைமை தொடர்பாகவும் பேசாத அரசாங்கம், போர் வெற்றியின் பின்னர் 13 ஆவது அரசியலமைப்பின் மூலம் ஓர் நிரந்தர தீர்வை அடைதல் என்கின்ற இராஜதந்திர திட்டமிடலை நடைமுறைப்படுத்த எத்தனித்துள்ளமையும், தமிழ் அரசியல் தலை மைத்துவம் அது தொடர்பான கருத்தாடல்களை முன்வைப்பதும் கவலைக்குரிய விடயமா கும். இது தொடர்பாக தமிழர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக காணப்படுகின்றனர்.

இந்நிலையில் 13 ஆவது திருத்தச் சட்டம் என்றால் என்ன? அதன் பயன்கள் என்ன? எந்த வகையில் அது முக்கியத்துவம் பெறுகிறது? அல்லது முக்கியத்துவம் அற்றது என்பது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கே.குருபரனுடன் ஒரு கருத்தாடலை மேற்கொண்டேன். இனி இது குறித்து அவர் தரும் தகவல்கள்...

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிற்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகவேஇலங்கையில் 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் ராஜீவ் காந்தியும் ஜே.ஆர் ஜெயவர்த்தனவும்செய்துகொ ண்ட உடன்படிக்கையின்படி வந்த 13ஆவது அரசமைப்பு திருத்தத்தின் அனைத்து அம்சங்களும் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். தமிழர் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும். அதனை நடைமுறைப்படுத்த இந்தியா நேரடியாக தலையிட வேண்டும் என்கின்ற கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதே சமயம் இன்று அரசாங்கத்தினுடைய நிலைப்பாடானது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதா..? நடைமுறைப்படுத்துவதா யின் எந்த வடிவத்தில் நடைமுறைப்படுத்துவது..? அதில் குறைப்புக்களை செய்வதா (13-), அதில்

எதனையும் சேர்ப்பதா (13+) என்கின்ற வகையில் காணப்படுகின்றது.

இருந்தபோதும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் எதனையும் சேர்ப்பது தொடர்பாக எதுவும் அரசாங்கத்தினால் தெளிவாக சொல்லப்படவில்லை. இது தொடர்பாக இந்தியா கூடுதலாக பேசி வருகின்றது. இதனைப்பின்பற்றி தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தல் என்கின்ற நிலைப்பாட்டில் உள்ளது. ஆனால் 13+ என்பது பற்றி எதனையும் இதவரை தெளிவுபடுத்தவில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கம் செனட் அமைப்பது தொடர்பாக கதைத்தது. இது எவ்வாறு 13+ ஆக அமையும் என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை. மாகாணங்களில் இருந்து இரண்டு இரண்டு பிரதி நிதிகளை செனட்டிற்கு அனுப்பி எந்த விதத்திலும் அதிகாரம் இல்லாத இவ்வமைப்பின் மூலம் கூடுதலாக ஒன்பது மாகாணங்களில் இரண்டே இரண்டு மாகாணங்கள் தான் தமிழர்கள் வாழ்கின்ற மாகாணங்கள் என்ற வகை யில் அதனை வைத்துக்கொண்டு எந்தவிதமான பெரும்பான்மையினையும் பெற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் எந்த விதமான அதிகாரங்களையும் பெற்றுக் கொள்ளமுடியாது.

## 13+ சாத்தியமா?

13+ என்பது அரசியலமைப்பு ரீதியாக எந்தவிதத்திலும் சாத்தியமில்லை. ஏனெனில் சுப்பரீம் கோட் 1987 ஆம் ஆண்டில் கொடுத்த தீர்ப்பில் ஒற்றையாட்சியின் படி குறிப்பிட்ட சில அதிகாரங்களை கொடுக்க முடியும் என்பது வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே மேல் அதிகாரங்களை வழங்குவதாய் இருந்தால் ஒற்றையாட்சி அல்லாத அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட வேண்டும்.

எனவே 13+ என்பது சாத்தியமில்லை. அதே சமயம் தற்போது 13-இற்குரிய பல நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரிப்பு. அதேபோன்று 13 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் உரு வாக்கப்பட்ட சட்டங்கள் அதில் இருந்த குறைந்தபட்ச

**தமிழர்களிற்கு ஒரு தீர்வை கொடுத்து விட்டோம் என்பதனை இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் என்கின்ற மாயை மூலம் உருவாக்க இந்தியா விரும்புகின்றது.**

அதிகாரங்களையும் இல்லாது செய்து விட்டது. இதனையும் தாண்டி அடையாள ரீதியாக அதாவது குறியீட்டு ரீதியாக போட்டு வைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கூட இல்லாமல் செய்கின்ற நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதனை காணமுடிகின்றது.

13 அவது திருத்தச்சட்டத்தில் எந்தவிதமான நன்மையும் இல்லை. இது தொடர்பாக இந்தியாவில் உள்ள முக்கியமாக daily mirror, Sunday leader போன்ற தினசரிகளில் தனது கட்டுரைகளை எழுதி வருகின்ற பிரபல பத்தி எழுத்தாளர் சத்தியமூர்த்தி எழுதியிருக்கின்ற விடயம் இங்கு நோக்கப்பட வேண்டியது.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் மாகண சபை உருவாக்கப்பட்டு தமிழ் ஆட்சி ஒன்று நிலைகொள்ளும் பட்சத்தில் அமெரிக்கா சர்வதேச விசாரணையினை கைவிடும் நிலை ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். இதனையே இந்தியாவும் விரும்புகின்றது.

தமிழர்களிற்கு ஒரு தீர்வை கொடுத்துவிட்டோம் என்பதனை இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் என்கின்ற மாயை மூலம் உருவாக்க இந்தியா விரும்புகின்றது. இதற்கு அமெரிக்காவும் தற்போது உடன்படுகின்றது. ஆனால் 13 ஆவது திருத்தச்சட்டம் பிரச்சினைக்கு வழிகோலும் இந்நிலையில் இவற்றை வழங்கக்கூடாது என விமல் வீரவன்ச தெரிவித்து வருவதனையும் நாம் அறி வோம்.

எனவே 13+ நல்லது என்பதற்கு அப்பால் சர்வதேசத்தை இலங்கை அரசாங்கம் சமாளிக்க வேண்டுமாயின் இந்தியாவை சமாளிக்க வேண்டும். இதற்கு 13 ஆவது திருத்தத்தினை நிறைவேற்றுவது மாதிரியான ஓர் பாசாங்கினை அல்லது அதனை நிறைவேற்று வதற்கான முயற்சியினை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்து வருகின்றனர்.

13 ஆவது திருத்தம் கொண்டுவரப்படுவது தமிழர்களிற்கு தீர்வாகாது. அதேவேளை இலங்கை அரசு சர்வதேச விசாரணைகளில் இருந்தும், அழுத்தத்தில் இருந்தும் தப்பித்துக் கொள்வதற்கான முயற்சியே.

## ஆளுநருடைய அதிகாரங்கள்

தற்போது ஆளுநருடைய அதிகாரங்கள் பூரணமாக உள்ளன. மாகாண சபையில் நிதி சார்ந்த எந்த ஒரு சட்ட மூலத்தையும் கொண்டு வருவதாக இருந்தால் ஆளுநருடைய அதிகாரம் இல்லாமல் கொண்டுவர முடியாது. இது 90 இற்கும் மேற்பட்ட சட்டமூலங்களை பாதிக்கின்றது. அதாவது 90 இற்கும் மேற்பட்ட சட்டமூலங்களை ஆளுநரின் அனுமதியின்றி கொண்டு வருவது சாத்தியமற்று போகின்றது. இது சட்டவாக்கத்துறையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

இது தவிர நிறைவேற்று துறையினை பொறுத்தவரை குறிப்பாக மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு என்பதும் முழுமையாக ஆளுநருடைய கட்டுப்பாட்டில் உள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் மாகாணப் பொதுச்சேவையில் ஒருவரை நியமிக்கின்ற, விலக்குகின்ற மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் இவருக்கு உண்டு. இதன் மூலம் நிறைவேற்று அதிகாரம் என்பது இவரது கரங்களில் குவிந்திருப்பதனை காணமுடிகின்ற து.


குறிப்பாக மாகாணக் கல்விப்பணிப்பா ளர், பிரதம செயலர் நியமனங்களை கருதமுடியும். இதனால் மாகாண முதலமைச்சரின் பரிந்துரைகளை கேட்டு செயல்படும் நிலை என்பது முற்றாக இல்லாது போகும். குறிப்பாக பிரதேச செயலர்கள் மத்திய அரசினால் நியமிக்கப்படுகின்ற போதிலும் மாகாண நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகளாக விளங்குவதனை இங்கு நாம் குறிப்பிட்டு நோக்கவேண்டும்.

ஆளுநர் சட்டவாக்கத் துறையிலும், நிறைவேற்றுத் துறையிலும் ஆதிக்கம் செலுத்தக் கூடிய சூழ்நிலையில் அதிகாரங்கள் உண்டு என்பது தவிர இருக்கின்ற அதிகாரங்கள் அனைத்தும் இவருடைய கைகளில். இதற்கு அப்பால் ஜனாதிபதியின் பிரதிநிதியாக மாகாண சபையில் ஆளுநர் இருப்பதால் மத்திய அரசின் அதிகாரங்களை கூட ஆளுநரே செயல்படுத்துகின்ற நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் மாகாண, மத்திய அரசினுடைய அதிகாரங்கள் ஓர் ஆளுநரின் கைகளில் உள்ள சந்தர்ப்பத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மாகாண சபையினால் எதனையும் சாதிக்க முடியாது என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது.

இந்நிலையில் மாகாண,மத்திய அரசினுடைய அதிகாரங்கள் ஓர் ஆளுநரின் கைகளில் உள்ள சந்தர்ப்பத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மாகாண சபையினால் எதனையும் சாதிக்க முடியாது என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது.

எனவே வட மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும் பட்சத்தில் தமிழ்த் தலைமைத் துவம் நேரடியாக போட்டியிடாமல் சுதந்திரமான ஓர் பிரதிநிதிகள் குழுவினை நிறுத்துவதன் மூலம் அதாவது மாகாண நிர்வாகத்தினை திறம்பட நடத்தக் கூடியவர்களை தெரிவு செய்வதன் மூலம் தங்களை மீள் கட்டமைத்துக் கொண்டு சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அர்த்தமுள்ளதாக்க பொருத்தமான நடவடிக்கைகளை செயல் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும்.



# முடங்கிக் கிடக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டி

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்பதற்கு நல்ல உதாரணம் கந்தசாமி பாபு. 32 வயதான பாபு தற்போது யாழ்.நகரில் முனீஸ்வரன் வீதியில் ஒரு பெரிய துணிக்கடையின் உரிமையாளர்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து வறுமையில் வளர்ந்த பாபுவின் கடின உழைப்பும் விடாமுயற்சியுமே அவரை இன்று ஒரு முதலாளி ஆக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் புடவைக் கடை ஒன்றில் சாதாரண விற்பனையாளராக ஐந்து வருடங்களாக பணிபுரிந்து பின்னர் சிறிய அளவில் சொந்தமாக கடை ஒன்றை ஆரம்பித்தார்.

யாழ். நகரின் மத்தியில் எப்போதும் சன நெருக்கடியுடன் காணப்படும் நடைபாதை வியாபாரிகளின் கடைக்கு அருகில் இவர் கடை காணப்படுகின்றது. கடையில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தவேளை வங்கி ஒன்றில் 2 இலட்சம் ரூபா கடனாக பெற்றேன். கடையில் வேலை செய்தபோது சேமித்த பணம், பிறரிடம் கடனாக வாங்கியது என பல சிரமத்தின் மத்தியில் யாழ். பண்ணை வீதியில் ஒரளவு சிறிய கடையை 2006ஆம் ஆண்டு ஆரம்பித்தேன். முதலில் கஷ்டமாக இருந்தாலும் தற்போது ஓரளவுக்கு தொழிலில் முன்னேறி இருக்கிறேன். மேலும் முன்னேறுவேன் என்கிறார் பாபு நம்பிக்கையுடன்.


> சாதாரண குடும்பத்தில் பிறந்து வறுமையில் வளர்ந்த பாபுவின் கடின உழைப்பும் விடா முயற்சியுமே அவரை இன்று ஒரு முதலாளி ஆக்கியுள்ளது.

32 வயதான பாபுவின் நம்பிக்கையும் விடாமுயற்சியுமே யாருக்கும் கட்டுபாடாமல் சுயமாக ஒரு புடவைக் கடையை நடத்துமளவுக்கு முன்னேற்றியிருக்கிறது.

முயற்சியே இல்லாமல் முடங்கிக் கிடக்கும் இளைஞர்களுக்கு பாபு ஒரு வழிகாட்டி.

-சக்திவேல்-

# "விழிப்புணர்வை ஊட்டுவதாக குறும்படங்கள் அமையவேண்டும்"





**ஒரு திரைப்பட தயாரிப்பாளர் விமர்சகனாகவும் வாசக னாகவும் இருந்து படத்தினை தயாரிக்க வேண்டும்.**

யாழ்ப்பாணத்தில் முன்னரை விட தற்போது குறும்படங்களின் தயாரிப்பு அதிகமாகி வருகிறது. இத்தகைய குறும்படங்கள் சமூகத்தில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே குறும்படங்கள் ஊடாக சமூகத்துக்கு விழிப்புணர்வூட்ட கலைஞர்கள் முன்வர வேண்டும் என்கிறார் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் சறோஜா சிவச்சந்திரன்.

நெடுந்தீவு முகிலனின் தோட்டி குறும்பட வெளியீடும் சாம்பல் குறும்பட அறிமுகவிழாவும் கடந்த ஜூன் 8 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே திருமதி சறோஜா சிவச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார். சில கலைஞர்கள் திரைப்படம் தயாரிப்பது தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்காகவும் பொழுது போக்குக்காகவும் தான். அவ்வாறு இல்லாது குறும்படங்கள் ஊடாக சமூகத்தின் உள்ள பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலப்பகுதியில் இவ்வாறான குறும் திரைப்படங்களின் வரவு அரிதாக இருந்தன. இன்று தொழில்நுட்ப வளர்ச்சியால்



குறும்படங்கள்
யாழ்ப்பாணத்தில் இருந்து
அதிகமாக
வெளிவருகின்றன.

ஆனால் புலிகளின்
காலப்பகுதியோடு
ஒப்பிடுகையில் தற்போது
கலாசார சீர்கேடுகள்
அதிகரித்து வருகின்றன என
வும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாலியல் அடக்கு முறைகள்.
இளைஞர்கள் மது
போதைக்கு அடிமை
ஆகுதல் போன்ற
பிரச்சினைகள் இன்று தமிழர்
மத்தியில் அதிகரித்து
வருகின்றன. இவ்வாறான
பிரச்சினைகளை திரைப்பட
கலைஞர்கள் இனங்கண்டு
சமூகத்தில் விழிப்புணர்வூட்டு
வதற்காக இவ்வாறன
குறும்படங்களை தயாரிக்க
வேண்டும் எனவும் திருமதி.
சறோஜா சிவச்சந்திரன்
கோரிக்கை விடுத்தார்.

தோட்டி படத்தின்
ஆய்வுரையை மூத்த
பத்திரிகையாளர்
ந.வித்தியாதரன்
நிகழ்த்தினார். ஒரு திரைப்பட
தயாரிப்பாளர்
விமர்சகனாகவும்
வாசகனாகவும் இருந்து
பா த்தினை தயாரிக்க
வேண்டும். வறுமையிலும்
செழுமையாய்
வாழவேண்டும் என்பதை
தோட்டி திரைப்படம்
வலியுறுத்துகின்றது.


ஒரு தாய் தனது இரண்டு
பிள்ளைகளுடன் தெருவில்
பிச்சை எடுக்கின்றாள்.
யாருமே அவர்களுக்கு
ஒருவேளை உணவு வழங்கத்
தயாராக இல்லை.

அதேநேரம் உணவு
வைப்பதற்காக காகத்தினை
எதிர்பார்த்து நிற்கும் ஒரு மூட
நம்பிக்கைக்கும் தோட்டி
குறும்படம் சாட்டையடி
கொடுத்துள்ளது என்று அவர்
குறிப்பிட்டார்.






# "வலி" சுமந்த பாடசாலை



**ஆறு வருடங்களில்
ஏழு முறை இடம்பெயர்ந்த
கீரிமலை நகுலேஸ்வராவின்
அவலங்களின் பதிவு**

ஆறு வருடங்களுக்குள் ஏழு தடவைகள் இடம்பெயர்ந்து வெவ் வேறு இடங்களில் ஒரு பாடசாலை இயங்கியதென்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அல்லது வடக்கைப் பொறுத்தவரை இது ஒன்றும் நம்ப முடி யாத விடயம் அல்ல.

பல பாடசாலைகள் கல்லூரிகள் இன்னமும் கூட சொந்த இடங்களில் இயங்க முடியாத நிலையில் தனியார் காணிகளிலும் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருவது கண்கூடு.

இவ்வாறு 7 தடவைகள் இடம்பெயர்ந்து அவலங்களைச் சந்தித்த பாடசாலைகளில் ஒன்று தான் கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கு நோக்கி சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலத்திற்கு 150 மீற்றர் தொலைவில் இப்பாடசாலை அமைந்துள்ளது

"சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய திற மையும் ஆளுமையுமுடைய மாணவரை உருவாக்குதல்" என்ற தூர நோக்குடன்

வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் ஒரு பாடசாலை அமைய வேண்டுமென எண்ணி கிராம சேவகர் சுப்ரமணியம் கனகசபை என்பவர் தனக்குச் சொந்தமான பத்தரைப் பரப்புக் காணியை வழங்கி கொட்டகை அமைத்து சைவவிருத்தி சங்க முகாமைத்துவத்தின் கீழ் இப்பாடசாலையை நிறுவினார்.

01.07.1955 அன்று தபால் தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த சு.நடேசன் இப்பாட சாலையைத் திறந்து வைத்தார். அக்காலப்



பகுதியில் அரச அதிபராக இருந்த ம.சிறிகாந்த, நகுலேஸ்வர மகா வித்தியாலயம் என்ற நாமத்தினை இப்பாடசாலைக்கு சூட்டினார். வேறிடத்தில் ஆசிரியராக இருந்த வ.கந்தையா தனது பதவியை இராஜிணாமா செய்து பதிவு பெறாத நிலையில் இப்பாடசாலையை பொறுப்பேற்றார். அப்போது 40 மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். மாணவர் தொகை அதிகரிக்க ஆரம்பித்தபோது கருகம்பனை கிராம முன்னேற்றச் சங்கத்தின் உதவியுடன் நிதி திரட்டி 10 அடி நீள மும் 40 அடி அகலமும் கொண்ட கட்டடம் அமைப்பு பணி தொடங்கியது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் வழங்கிய 25,000 ரூபா நிதி யுடன் கட்டடப் பணிகள் பூர்த்தியாகின.

19.05.1956 ல் பாடசா லைக்கு வந்த வடமாகாண

**ஒரே வருடத்தில் 2 இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய அவலத்தையும் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் எதிர்கொண்டனர்.**

கல்விப்பணிப்பாளர் இப் பாடசாலையை பதிவு செய்ய சிபாரிசு செய்தார். 1957 முதல் இங்கு வேலை செய்த ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது.

1960 ம் ஆண்டு கா.பொத.சாதாரண வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் அரச முகாமைக்கு பாடசாலை உட்பட்டது.

பாடசாலைக்கு தென்புறமாக இருந்த $18\frac{1}{2}$ பரப்புக் காணி அரசால் வழங்கப்பட்டது. $28\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் 01.-7.1965 ல் 10வது ஆண்டு நிறைவினை இப்பாடசாலை கொண்டாடியது. 1990 ஆம் ஆண்டு போர்ச்சூழலினால் இடம்பெயர்ந்தது கீரிமலை நகுலேஸ்வரா மகா வித் தியாலயம்.05.06.1990 இளவாலை அன்னை வேளாங்கன்னி, 05.12.1990 இளவாலை மெய் கண்டான் மகா வித்தியாலயம், 15.07.1991 சிறுவிளான் கனகசபை வித்தியாலயம், 24.06.1992 அளவெட்டி அரு ணாசலம் வித்தியாலயம், 07.07.1992 உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், 28.03.1993 சீரணி சண்டிலிப்பாய் தனியார் வீடு, 01.02.1996 வரணி மகா வித்தியாலயம் என வேவ்வேறு இடங்களில் இயங்கியது.

ஒரே வருடத்தில் 2 இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய அவலத்தையும் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் எதிர்கொண்டனர்.

இக்காலப்பகுதியில் அதிபர் சு.சிவபாதரம் இப்பாடசாலையை தொடர்ந்தும் இயக்குவதில் எடுத்த முயற்சிகளும் ஆற்றிய பணிகளும் இன்றும் நினைவுகூரப்படுகின்றன.




இவர் இளைப்பாறிய பின் த. மோகன்ராஜ் அதிபராக பொறுப்போற்றார். 2010 வரை இவர் அதிபராக இருந்தார்.

இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குண்டிருந்த இப்பாடசாலையை சுமார் இருபது வருடங்களுக்குப் பின்னர் 2012 இல் அதன் சொந்த இடத்தில் இயக்குவதற்கான முயற்சிகள் கைகூடின.

01.02.2010 சிறீக்குமரன் பாடசாலையைப் பொறுப் பேற்றார். மக்கள் கீரிமலையில் படிப்படியாக மீள் குடியேற அனுமதிக்கப்பட்டனர். அதிபர் சிறீக்குமரன் பாடசாலையை அதன் சொந்த இடத்தில் மீள இயக்குவதற்கு பெரும் பாடுபட்டார். பல்வேறு தரப்புக்களுடன் தொடர்பு கொண்டு இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைச் சூழல் துப்பரவு செய்யப்பட்டு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்புடன் கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டன.

24.06.2011 அன்று வடக்கின் துரித மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் 90அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட ஆய்வு கூடத்துடன் கூடிய மாடிக்கட்டடம்,தண்ணீர்த் தாங்கி மலசலகூடத் தொகுதி ஆகியன அமைப்பதற்கு அதிபர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.
சிறுவர் பாதுகாப்பு நிறு வனம் (save the children) 40 அடி நீள வகுப்பறைத் தொகுதியை புனர மைத்துக் கொடுத்ததுடன், தற்காலிக கொட்டகைகளை அகற்றி கீரிமலை யில் பாடசாலையை மீள நிறுவ நிதி யுதவியும் அளித்தது.

இருபது வருடங்களுக்குப் பின்னர் 02.01.2012 கீரிமலையில் தனது சொந்த இடத்தில் பாடசாலை இயங்க ஆரம்பித்தது.

பல இடப்பெயர்வுகளை சந் தித்தாலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முடிந்தளவு சிறப்பாக முன்னெடுப்பதில் இப்பாடசாலை பின்நிற்கவில்லை. தற்போது 11 நியமன ஆசிரியர்களையும் 3 தொண்டராசிரியர்களையும் 4பகுதி நேர ஆசிரியர்களையும் கொண்டு செயற்பட்டு வருகிறது என்கிறார் இப்பாசாலை அதிபர் திருமதி சதீஸ்குமார். ■

-சரண்யா-



# கோட்டைச் சுவர்களின் பின் மறைக்கப்படும் வலிகள்

யாழ்ப்பாணக் கோட்டை இன்று முக்கியமான சுற்றுலாத் தளமாக மாறியுள்ளது. தினந்தினம் ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்தக் கோட்டைக்கு வந்து செல்கின்றனர். இந்தக் கோட்டை ஏதோ யாழ்ப்பாணத்து வரலாற்றுச் சாதனை என்ற கோணத்தில் நோக்கப்படுகிறது.

ஆனால் இந்தக் கோட்டையால் யாழ்ப்பாண மக்கள் சுமந்த வலிகளும் வேதனைகளும் மறக்கப்பட்டு அல்லது மறக்கச் செய்யப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்து மக்களைப் பொறுத்தவரை இது ஒரு துயரத்தின் சின்னம். இலங்கை மக்களைப் பொறுத்தவரை இது அடிமைத்தளையின் சின்னம்.

நீண்ட ஈழப் போராட்ட வரலாற்றை நோக்கினால் கோட்டை தவிர்த்து அதனைக் குறிப்பிடவே முடியாது. யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து இலங்கை இராணுவத்தினை வெளியேறவிடாது தமிழ் போராளிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகை ஈழ யுத்தத்தின் திருப்பு முனையாக அமைந்தது.

உலக போராட்ட வரலாற்றிலேயே மிக நீண்ட கால முற்றுகையாக இது அமைந்திருந்தது. 3 வருடங்கள், 23 நாட்கள் இலங்கை இராணுவத்தினரை கோட்டைக்குள் முடக்கி முழுமையான முற்றுகைக்குள் தமிழ்ப் போராளிக் குழுக்கள் வைத்திருந்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து 1984 ஆம் ஆண்டு புளொட் , ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற விடுதலை இயக்கங்களும் இந்த முற்றுகைப் போராட்டத்தில் இணைந்து பங்கெடுத்தன.

1984 ஆம் ஆண்டு ஜீலை மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட தளபதி கிட்டு தலைமையில் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகைக்குட்படுத்தப்பட்டது. 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய அமைதி காக்கும் படை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசிக்கும் வரை இந்த முற்றுகையை இலங்கைப் படையினரால்

முறியடிக்க முடியவேயில்லை. கொட்டடி, காங்கேசன் துறை வீதி, முனியப்பர் வீதி, நூல்நிலைய வீதி, அங் காங்கே அரச கட்டிடங்கள் போன்றவற்றில் நிலைகொண்டிருந்த சுமார் 450 ஈழப் போரா ளிகளும் அவர்களால் கோட்டைச் சூழலில் விதைக்கப் பட்டிருந்த கண்ணி வெடிகளும் இலங்கை இராணுவத்தினரை வெளியேறவிடாமல் தடுத்து கொண்டிருந்தது.


DAILY

யாழ். கோட்டைப் படையினர்

சரணடையும்வரை

முற்றுகை நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

1984 - 85 காலகட்டத்தில் இலங்கை இராணு வத்தினரை முகாங்களுக்குள் முடக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டனர். இதன் ஒரு கட்டமாக கோட்டை, பலாலி முகாம்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தொடர் முயற்சிகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணக் கோட்டையால் எண்ணிலடங்கா வேதனைகளையும் மன உளைச்சல்களையும் தமிழ் மக் கள் தொடர்ந்து அனுபவித்த காலம் அது.

1986ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி கோட்டையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரை வெளியேறக் கோரி வர்த்தகர்கள் கடையடைப்பு போராட்டங்களில் ஈடுபட்டனர். மாணவர்கள் குழுக்களாக சென்று கோட்டை வாயிலில் வைத்து மகஜர்களையும் கையளித்தனர்.

இராணுவத்தினரை வெளியேறக்கோரி மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் தொடர் போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

கோட்டை முகாமை அகற்றுவதே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாகும் என்ற கருத்தை வலியுறுத்தியும் காலநேரமின்றி மேற்கொள்ளும் ஷெல் வீச்சினை சுட்டிக்காட்டியும் இரண்டு இலட்சம் மக்கள் கையெழுத்திட்டு கோரிக்கை ஒன்றையும் இலங்கை அரசிடம் விடுத்தனர். எனினும் எந்த தீர்வும் எட்டப்படவில்லை.


ஆங்காங்கே இடம்பெற்ற தொடர் ஷெல் வீச்சுக்களால் யாழ்ப்பாணத்தில் உயிர்ப் பலிகள் சர்வ சாதாரண மாகிக்கொண்டிருந்தன. மருத்துவமனை, பாடசாலை




கட்டிடங்கள், ஆலயங்களில், பொது இடங்கள் என்ற பேதமின்றி ஷெல் வீச்சு தொடர்ந்துகொண்டே இருக்கும்.

கோட்டையில் இருந்து 1986 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஷெல்த் தாக்குதலால் குருநகர்ப் பகுதியில் முப்பது மீனவர்கள் பரிதாபமாகப் பலியாகினர்.

1987 ஆம் ஆண்டு ஜீலை மாதம் கோட்டையில் இருந்து



மண்டைதீவுப் பகுதி நோக்கி மேற்கொள்ளப்பட்ட பயங்கர ஷெல் தாக்குதலால் அப்பகுதி கடற்கரையோர மக்கள் பெருமளவில் உயிரிழந்தனர்.

இதனை விரிவாக விளக்கும் வகையில் "கோட்டை மண்டைதீவு ஷெல் உருவாக்கிய யாழ்ப்பாண அகதிகள்" என்ற கட்டுரையை ஈழநாடு பத்திரிகை தொடர்ச்சியாக பிரசுரித்தது.

முழு குடா நாட்டிலிருந்தும் இராணுவத்தினரை விரட்டியடிக்கும் திட்டம் கோட்டையை கைப்பற்றி விட்டால் சாத்தியமாகிவிடும் என புலிகள் நம்பினர். இந்த எண்ணத்திலேயே 1990 ஆம் ஆண்டு யாழ். கோட்டை விடு தலைப்புலிகளின் முற்றுகைக்குள்ளானது.

இராணுவத்தினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களையும் வெகு தூரம் சென்று தாக்கும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் அது மாத்திரமன்றி பொம்மர் குண்டுவீச்சு விமானத் தாக்குதலையும் மேற்கொள்ள பதிலுக்கு புலிகள் ரொக்கட் தாக்குதல்களையும் மேற்கொள்ள கோட்டை சுற்று வட்டாரத்தில் வாழ்ந்த பலர் எதிலிகளாகினர்.

இவ்வாறு தொடர்ந்த யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் சரியான பாதுகாப்பின்றியும் உண வின்றியும் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

தொடர்ந்து கொண்டிருந்த யாழ்.கோட்டைச் சமர் சம்பந்தமாக இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் வெளி யான ஈழநாடு பத்திரிகைச் செய்தியில் "இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் மயான பூமியாக்கும் திட்டம் நிறுத்தப்பட்டாலொழிய இது போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த மண்ணிலேயே அகதி களாக வேண்டியிருக்கும்" என கூறப்படிருந்தது கவனத்துக்குரியதாகின்றது.

**[ஹம்ஷா, துவாரகி]**




## வாழ்க்கை

வாழ்வில் வெற்றியும் இல்லை
தோல்வியும் இல்லை
உணர்ந்து கொள்
இன்னும் சுழன்றுகொண்டுதான்
இருக்கின்றது உலகம்
நீ வாழ
உன்மேல் நம்பிக்கை வை
பிறரிடம் எதையும் எதிர்பார்க்காதே
ஆலமரம் போல் - உன்
பலத்தை நீயே உருவாக்கு

சொல்பவர் சொல்லட்டும்
குறை கூறுவோர் கூறட்டும்.
உன் எண்ணம் நல்லதென்றால்
நீ அவ்வழியே செல்

நீ சொல்லும் உண்மைகள் கசக்கும்
அதை உலகம் எதிர்க்கும்
தடைகள் தடுக்கும்
அவற்றை தூசெனக் கொள்
உன்னை புயலென மாற்று

காலத்திற்காக உன்னை மாற்றாதே
உன்னால் முடியும்
காலத்தை நீ மாற்று
நிமிர்ந்து நிற்கும் காலம் வரும்
அன்று உன்னை
சிகரத்தில் ஏற்றி வைத்த தீபம் என
உலகம் பார்க்கும்.


*-சி.திவாகரன்-*

## விவசாயி


போகம் பார்த்து
வெயில் மழை பாரமல்
உறக்கமின்றி உழுது பண்படுத்தி
விதை விதைச்சு
நட்டவிதை விளையும் வரை நீர்பாய்ச்சி
கட்டாக்காலி கால்நடைகள் நாசம்பண்ணாம
இரவுபகல் காவல்காத்து பாடுபட
முளை பயிராகி விளைச்சல் தரும் வேளையில
நாசமா போன மழை
போகம் மாறி வந்து பெய்யும்
தண்ணீரில விளைஞ்ச பயிர் தண்ணீரிலேயே மிதக்கும்
அதை விதைச்சவன் மனம் கண்ணீரில மிதக்கும்
அழிஞ்சது போக
அங்க கொஞ்சம் தப்பி வரும்
தப்பியதை காய வைத்து
பதப்படுத்தி பக்குவமாய் வைத்துவிட்டால்
வேண்ட வந்த வியாபாரி
நூறு கதை பேசுவான்
அவன் கதைக்கு இசைவது போல்
ஓரிரண்டு தலைகாட்டும்
அதை வைத்தே உவமிக்க தொடங்கிடுவான்
பாதி விலை கேட்பான்
வைத்து அழகு பார்க்க பொன்னோ பொருளோ
இரண்டு நாள் கிடந்துவிட்டால் அழுகிவிடும்
கேட்ட விலைக்கே கொடுத்திடுவான்
வியாபாரி படலை தாண்ட முன்பே
கடன் கொடுத்தவன் வந்து நிற்பான்
வேண்டிய கடனை தா என்பான்.
நிலத்தில போட்டதில பாதி கூட தேறவில்லை - இல்லை
என்று கூறினால்
கையில் கிடைத்ததை விட்டுவிடுவானோ.
கையோடு அவன் பறிப்பான்
பாடுபட்ட பாவிக்கு
பையிலோ கையிலோ ஏதுமில்லை
மனமுடைந்த சோர்ந்திடுவான் அவன் -இனி
விவசாயமே என் வாழ்வில் இல்லை என்பான்
மீண்டும் அவன் எண்ணுவான்.
என் வயல் தரிசாய் போய்விடுமே
என் வயல் பாழாகுவதோ என்பான்
மீண்டும் போகம் பார்ப்பான்
ஏரெடுத்து நிலம் உழுவான்
அவன் வாழ்வு என்னாகுமோ...?

**-சி.திவாகரன்-**





# உலகெங்கும் ஒலிக்கும் ஈழத்து நாதம்



**இலங்கையில் முதன்முதலில் நாதஸ்வரக் கருவியை உருவாக்கியவரும் புகழ்பூத்த சிற்பக் கலைஞருமான அராலியூர் அமரசிங்கம் ஆசாரியாரின் நீண்ட கலையுலகப் பயணம் ஒரு பார்வை.**

நிறைகுடம் தளம்பாது என்பார்கள். கலையுலகில் உச்சத்தில் இருந்தும் இன்னும் நான் அத்துறையில் திருப்தி அடைய வில்லை என அடக்கத்தோடு சொல்கிறார் புகழ் பெற்ற ஈழத்து சிற்பக் கலைஞரும் இலங் கையில் முதன் முதலிலே நாதஸ்வர இசைக் கருவியை உருவாக்கி புகழ்பெற்றவருமான அராலியூர் சின்னத்தம்பி அமரசிங்கம் ஆசாரியார்.

சிற்பக் கலையில் அவரின் திறமைகளைப் போற்றி இலங்கை அரசால் வழங்கப்படும் கலாபூஷணம் தேசிய விருதை நிராகரித்தவர் இந்தக் கலைஞர். 2003ஆம் ஆண்டு இந்த விருது இவருக்கு அறிவிக்கப்பட்டது.
ஈழத்தில் பல ஆலயங்களில் இவர் வடிவமைத்த சிற்பங்களே தேரில் பொலிவூட்டுகின்றன. ஆனாலும் சிற்பக் கலையில் நான் இன்னும் திருப்தி அடையவில்லை. ஆதனால் அத்துறைக்காக வழங்கப்படும் தேசிய விருதை நான் ஏற்றுக்கொள்ள தயாரில்லை என தன்னடக்கத்தோடு நிராகரித்தவர் இவர்.

இலங்கையில் முதன்முதலில் நாதஸ்வர இசைக்கருவியை உருவாக்கியவர் என்ற வகையில் இவரது இத்துறைசார்ந்த திறமை அரசால் அங்கீகரிக்கப்படவில்லை என்ற ஆதங்கம் இவரிடம் உண்டு.

ஆம் ஈழத்தின் முன்னணி நாதஸ்வரக் கலைஞர்கள் முதல் தென்னிந்திய நாதஸ்வரக் கலைஞர்கள் வரை இவர் உருவாக்கிய நாதஸ்வரங்களைக் கொண்டே நாத கீதம் இசைக்கின்றனர்.

முன்னர் ஈழத்து நாதஸ்வரக் கலைஞர்கள் தென்னிந்தியாவில் இருந்தே நாதஸ்வரங்களை வருவிப்பது வழக்கம். இலங்கையில் இவற்றைச் செய்யும் திறமையுடையவர்கள் யாரும் இல்லாததே அதன் காரணம். இலங்கையில் முதன்முதலில் நாதஸ்வரத்தை உருவாக்கியவர் அராலியூர் சின்னத்தம்பி அமர சிங்கம் ஆசாரியாரே.
சிறுவயதிலிருந்தே சிற்பக்கலையின் மீது ஆர்வம் கொண்ட அமரசிங்கம், பள்ளி செல்லும் பருவத்திலேயே தனது தந்தையாரிடமிருந்து சிற்பக்கலையின் நுணுக்கங்களையும் முறமைகளையும் கற்றுத்தேர்ந்துகொண்டார்.
ஆனாலும் ஈழத்தில் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்கள் இருந்தும் நாதஸ்வரத்தை உருவாக்கும் எவரும் இங்கு இல்லையே என்ற ஆதங்கம் அவரிடம் இருந்தது. நானே இதனைச் செய்தால் என்ன? என்ற சிந்தனையோடு அத்துறையில் தடம்பதித்தார் அமரசிங்கம் ஆசாரியார்.

1968 ஆம் ஆண்டு தனது இருபத்துமூன்றாம் வயதில் ஒரு நாதஸ்வரத்தை உருவாக்க முயன்றார் எவரிடமும் நாதஸ்வரம் உருவாக்கும் கல்வியை அவர் பயிலவில்லை. புயில நினைத்தாலும் நாதஸ்வரம் உருவாக்க இங்கு எவரும் இல்லை. எனினும் சோர்ந்துவிடாமல் தனது சுயமுயற்சியால் ஒரு நாதஸ்வரத்தை உருவாக்க முயன்றார்.
அவ்முயற்சியில் வெற்றியும் கண்டார். தான் உருவாக்கிய முதல் நாதஸ்வரத்தை இலங்கையின்



புகழ்பூத்த நாதஸ்வர வித்துவானாகிய கோண்டாவிலைச் சேர்ந்த வீ.ஏ பாலகிருஸ்ணனுக்கு கொடுத்தார். அன்று தொடங்கிய நாதஸ்வரம் உருவாக்கும் பணி காலகாலத்திற்கும் தொடர்ந்து கொண்டே இருந்தது. இலங்கையின் பூகழ்பூத்த வித்துவான்களின் நாதத்திற்கு அவர் உருவாக்கிய நாதஸ்வரங்களே உயிர்கொடுத்து வருகிறது.

ஈழத்தில் பிறந்து உலகம் முழுவதும் புகழ்பெற்ற நாதஸ்வர இசைக் கலைஞர் களான பத்மநாதன், கானமூர்த்தி பஞ்சமூர்த்தி, சுந்தரமூர்த்தி, மாக்கையா, சிவகுமார் போன் றோர் அவரின் நாதஸ்வரத்தை விரும்பி வாக்க லானார்கள்.

ஓர் முறை அவர் உருவாக்கிய நாதஸ்வரத்தை பஞ்சமூர்த்தி இந்தியாவிற்கு கொண்டு சென்று கச்சேரி செய்தார். ஆந்த நாதஸ்வரத்தின் நாத இனிமையைக் கண்டு வியந்து இந்தியாவின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான் பெங்களூர் கோதண்டராமன் அவ்நாதஸ்வரத்தை தனக்கு தரும்படி கேட்டுள்ளார்.

அப்போதுதான் அது எங்கள் நாட்டில் செய்யப்பட்ட நாதஸ்வரம் வேறு நாதஸ் வரத்தை உனக்கு செய்துதருகின்றேன் எனக் கூறி அமரசிங்கம் ஆசாரியாரின் பெயரைக் அவரிடம் குறிப்பிட்டுள்ளார்.

அன்றிலிருந்து இந்திய நாதஸ்வர வித்வான்கள் பல ருக்கும் இவரே நாதஸ்வரம் செய்து கொடுக்க ஆரம்பித்தார்.

உலகப் புகழ்பெற்ற இந்திய நாதஸ்வரக் கலைஞர்களான

ஆம் ஈழத்தின் முன்னணி நாதஸ்வரக் கலை ஞர்கள் முதல் தென்னிந்திய நாதஸ்வரக் கலைஞர்கள் வரை இவர் உருவாக்கிய நாதஸ்வரங்களைக் கொண்டே நாத கீதம் இசைக்கின்றனர்.

மாம்பலம் சிவா, மாம்பலம் நடராசா, சகோதரர்கள், பெங் களூர் கோதண்டராமன் மற்றும் இலட்சுமணன் (சகோதரர்கள்) இடும்பாவனம் இளையராசா, காத்திக், அன்பழகன் ஆகியோரிக் கும் இன்னும் பல நாதஸ்வர வித்துவான்களுக்கும் அமரசிங்கம் ஆசாரியாரே நாதஸ்வரத்தை உருவாக்கி கொடுத்துள்ளார்.

நாதஸ்வர இசைக் கருவியை உருவாக்குவதில் இவருக்கு இருந்த திறமையைப் பாராட்டி இலங்கையின் புகழ் பூத்த நாதஸ்வர கலைஞர்கள் ஒன்றிணைந்து அவருக்காக கௌரவிப்பு விழா ஒன்றையும் நடத்தினர். இவ்விழாவில் ரதாதி நாதஸ்வர சில்ப கற்பக என்ற விருது இவருக்கு வழங்கப்பட்டது.

நாதஸ்வரம் உருவாக்குவதில் புகழ் பெற்றாலும் தனது தந்தையாரிடம் கற்ற சிற்பகலையையும் அவர் கைவிட்டு விடாமல் இன்றளவிலும் அத்துறையில் சாதித்து வருகிறார். அராலி வடக்கு இலந்தைத்தாழ்வு ஸ்ரீ சிவசுப்பிரமணிய அலயத்தின் தேரே இவர் முதன்முதலில் உருவாக்கிய தேராகும்.

சங்கரத்தை பிட்டியம்பதி பத்திராளியம்பாள் ஆலயம், கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயம், இலந்தைவனம் சித்திவிநாயகர் ஆலயம், உரும்பிராய் பருவதவர்தினி அம்பாள் ஆலயம், மாதகல் பாணாவட்டி அம்பாள் ஆலயம், நயினாதீவு நாகபூசணி முருகன் ரதம், திருமஞ்சம், வேலனை முடிப் பிள்ளையார் ஆலயம், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம், உடுவில் கற்பக பிள்ளையார் ஆலயம், உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், அரியாலை பிரப்பங்குளம் மகாமாரியம்பாள் ஆலயம், நாரந்தனை கருணன்தோட்டம் சிவசுப்பிரமணிய ஆலயம், அராலி கிழக்கு மலையாளங்காடு புகாழ் புக்காள சமேச அரிகர புத்திர ஆலயம் போன்றனவற்றில் இவர் உருவாக்கியு தேர்களே இவரது திறமைக்குச் சான்று. சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயக ஆலயம், அராலி மத்தி வண்ணப்புர ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாதேஸ்வரர் ஆல யம் ஆகியவற்றுக்கு சிற்பத் தேர் அமைக்கம் பணியில் இவர் தற்போது ஈடபட்டுள்ளார்.

அராலியூர் சின்னத்தம்பி அமரசிங்கம் ஆசாரியார் திறமைக்கு சான்றாக இலங்கையில் புகழ்பூத்த ஆலயங்களின் சிற் பத்தேர் மற்றும் சிற்பங்கள் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு அவரது திறமையை பறைசாற்றும். இன்னும் அவர் உருவாக்கி நாதஸ்வரங்களில் இருந்து பிறக்கும் நாதமே அவரது புகழ்பாடும். இத்தயை கலைஞனுக்கு வழங்கப்படாத விருதால் அந்தக் கலைஞனின் தரம் குறையாது. மாறாக விருதின் தரமே குறைந்ததாக கருதப்படும்.



**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

Media Resources & Training centre , University of Jaffna

# இதழியல் டிப்ளோமா

முழுநேரம் - (இரண்டு ஆண்டுகள்)

# கல்வியாண்டு – 2013/2014

## Diploma in Journalism - 2013/2014

**புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான, 2013/2014 ஆண்டுக்கான, புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

1. அச்சு ஊடகம் (Print Media)
2. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
3. இணைய ஊடகம் (New Media)



**பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**

1. செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
2. றேடியோ மற்றும் ரி.வி நிகழ்ச்சிகள் தயாரிப்பு
3. ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
4. சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
5. ஆவணப்பட தயாரிப்பு
6. சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான பயிற்சிகள்

**விண்ணப்பப் படிவங்கள்**

விண்ணப்பப் படிவங்களை இல.84 ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ மற்றும் பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**அனுமதிக்கான தெரிவுமுறை**

1. எழுத்துத்தேர்வு (எழுத்தாற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு)
2. நேர்முகத்தேர்வு

**கற்கைக் காலம் – 2 ஆண்டுகள் (முழுநேரம்)**

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி-20.04.2013**



**கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூ. | 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. | 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூ. | 750.00 |
| நூலக பயன்பாடு | ரூ. | 1000.00 |
| **மொத்தம்** | **ரூ** | **22,500.00** |

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்**

**021 2229873**

**பதிவாளர்**

Print By - Noble Printers.